**DVC.NO. 1/2023     DW-1**

நாள் : 10.10.2024

பெயர் : சலீம்

த/பெ : அலி உசேன்

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

மனுதாரர் முபீனா உங்கள் மகன் அலி உசேன் மீதும் உங்கள் குடும்பதினர் மீது பெண்கள் வன்கொடுமை சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்துள்ளது தெரியுமா என்றால் தெரியும். மனுதாரர் உங்கள் குடும்பத்தில் உள்ள 5 நபர்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். 5 நபர்களுக்கும் பொதுவாக வழக்கறிஞர் வைத்து வழக்கு நடத்தப்படுகிறது என்றால் ஆமாம். உங்கள் மகன் அலி உசேன் ஏன் சாட்சி சொல்லவில்லை என்பதற்கு போதிய காரணங்களை உங்கள் பிரமாண வாக்குமூலத்தில் நீங்கள் சொல்லவில்லை என்றால் அவர் தரப்பு சாட்சியத்தை அவர் அளித்தார். நீங்கள் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யும் முன்பு உங்கள் மகன் வழக்கில் எதிர் உரை தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம்.

உங்கள் தரப்பு பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நீங்கள் நிரூபிக்க தயாரா என்றால் ஆமாம். எதிர் மனுதாரர் அலி உசேன் சாட்சியம் அளித்தாள் உண்மை விவரம் தெரிய வரும் என்பதால் நீங்கள் சாட்சியம் அளிக்க வந்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எதிர் மனுதார் அலி உசேன் நல்ல நிலையில் தான் உள்ளார் அவர் சாட்சியம் அளித்தாள் வழக்கின் உண்மை நிலவரம் தெரிய வரும் என்றால் ஆமாம்.

**எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் கோரிக்கைக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கபடுகிறது.**

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

Sd/- *************
District Munsif cum Judicial Magistrate,
Ranipet.